மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 19-ம் நாள் வியாழக்கிழமை

E.A.3/2019 IN E.P 10/2019

ம.சா.1

சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 44 வது சட்ட ஏற்பாட்டின்படி) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: நவீததுரை | தேதி :19.06.25 |
| வயது : | த/பெ : நாராயணன் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**19.06.25 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. ம.சா.ஆ 14 முதல் ம.சா.ஆ 27 வரையிலான ஆவணங்கள் நீதிமன்றத்தில் நகல் பெற்று தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ 17, ம.சா.ஆ 24, ம.சா.ஆ 25 தவிர மற்ற ஆவணங்கள் நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைகள் என்றால் வழக்கறிஞருக்குதான் தெரியும். ம.சா.ஆ 14 முதல் 27 வரையிலான ஆவணங்களை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்துள்ள தடங்கல் மனுவிற்கு தேவை என்பதால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் குறித்து மனு மற்றும் என்னுடைய நிரூபண உறுதி கூற்றில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் வழக்கறிஞர் சொல்வார்.

2. என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ 2 என் அம்மா எனக்கும் எனது சகோதரருக்கும் எழுதி கொடுத்த ஏற்பாடு ஆவணம் ஆகும். என் அம்மா பிறந்த

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.06.19 20:23:17 +0530

ஊர் மாவடிப்பண்ணை. என் அம்மாவின் அப்பா பெயர் லெட்சுமணன். ம.சா.ஆ 2ல் கண்ட சொத்து என் அப்பா மூலம் என் அம்மாவுக்கு பாத்தியம். ம.சா.ஆ 2ல் என் அம்மாவுக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டது என்றால் என் அப்பா வழியில் பூர்விகம் என்பதைதான் அவ்வாறு சொல்லியுள்ளார்கள்.

3. என் அம்மா எந்த ஊரில் பிறந்தார்களோ அந்த பெற்றோர் வழியில் கிடைக்கும் சொத்துதான் என் அம்மாவின் பூர்விகம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ 2 ல் சொத்து விபரத்தில் 3 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ம.சா.ஆ 2ல் வீட்டு ரசீதுகள் எதுவும் இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பொதுவாக பத்திரம் பதிவு செய்யும் போது பதிவு செய்யப்படும் ஆவணத்தில் வீடுகள் குறிப்பிடப்பட்டிருந்தால் வீட்டு வரி ரசீதுகள் வைப்பார்கள் என்றால் சரிதான். அதை திரும்ப கொடுத்துள்ளோம். ம.சா.ஆ 2 பதிவு செய்யப்படும் போது என் தாயார் மற்றும் எனது பெயரில் வீட்டு வரி ரசீதுகள் கிடையாது என்றும் அதனால் தான் அதனை இணைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

4. ம.சா.ஆ 2 ல் இணைக்கப்பட்டுள்ள நத்தம் நில வரி துாய சிட்டாவினை நான் தான் வட்டாட்சியரிடம் நகல் பெற்றேன் என்றால் சரிதான். அதில் ஆ.5 நத்தம் சிட்டா நகல் மனு எண் 210/2012 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் சிவசுப்பிரமணியன் மேற்படி சிட்டா நகல் மனு எண் தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி மனுவினை கொடுத்தவர் யார் என்று கேட்டிருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நகல் மனு சம்பந்தமாக ஸ்ரீவைகுண்ட வட்டாட்சியர் 11.01.2019 ம் தேதி 1ம் எதிர் மனுதாரருக்கு தகவல் கொடுத்திருந்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. சிட்டா நகல் மனு எண் 210/2012 க்கும் ம.சா.ஆ 2ல் இணைக்கப்பட்டுள்ள சிட்டாவுக்கும் எந்த தொடர்பு இல்லை என்றால் அந்த ஆவணம் நாங்கள் மனு பெற்று வாங்கவில்லை. சிட்டாவில் என் அம்மா பெயர் எந்த ஆண்டு சேர்க்கப்பட்டது என்றால் என் அப்பா இறந்த பிறகு நத்தம் திட்டத்தில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2025.06.19 20:23:26 +0530

சேர்த்தார்கள். அதுவரை புஞ்ஞையில் இருந்தது. என் அம்மா பெயர் மங்களம் அம்மாள். ம.சா.ஆ 2ல் உள்ள சிட்டாவில் மங்கம்மாள் என்று உள்ளது என்றால் அவர்கள் தவறாக கொடுத்துள்ளனர். ம.சா.ஆ 2ல் சிட்டாவில் உள்ள பட்டா எண் தவறுதாலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. மனு தபசில் சொத்தில் பட்டா எண் 1383 என்றால் பட்டா எண் 383 தான். ம.சா.ஆ 2 ல் உள்ள சிட்டா பத்திர பதிவிற்காக மோசடியாக உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா.ஆ 2 ஆவணம், அதில் கண்ட சாட்சிகள், ஆவணம் தயார் செய்தவர், இன்னார் என்று நிரூபித்தவர்கள் என அனைத்தும் மோசடி என்று என் மீதும், என் சகோதரர், என் தாயர் மீதும் குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது தவறான வழக்கு. எங்கள் ஊரில் ஜமின் சர்வே முந்தி இருந்தது என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா துரைப்பாண்டி நாடார் 1ம்எதிர்மனுதாரரின் தாத்தா நாராயண நாடாரின் தத்து புதல்வன் என்றால் சரிதான்.

7. என் தாத்தாவின் உண்மையான தகப்பனாரின் பெயர் ஞானமுத்து நாடார். ஞானமுத்து நாடார் என் தகப்பானாருக்கு எந்த சொத்து எழுதிக் கொடுக்கவில்லை. என் தாத்தாவிற்கு நாராயண நாடார் நன்கொடை எழுதி கொடுத்த சொத்தை தவிர வேறு சொத்து இல்லை என்றால் சரியல்ல. அதில் தபசில் சொத்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கின் பிராது கொண்டுவந்துள்ளேனா என்றால் இல்லை.

8. மேற்படி தூத்துக்குடி மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் யார் யாரை கட்சி சேர்த்துள்ளேன் என்றால் வழக்கறிஞருக்குதான் தெரியும். ம.சா.ஆ 1ல் நாராயண நாடார் மகன் தங்கவேல் பெயரும் கூட்டாக உள்ளது என்றால் அதை தவறுதாலாக சேர்த்துள்ளனர். அதை நீக்க நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. என் அம்மா மனு கொடுத்தார்கள் எந்த முறையீடும் எடுக்கவில்லை. மேற்படி தங்கவேல் நாடார் மகன் தான் சிவசுப்பிரமணியன். ம.சா.ஆ 2 ல் சிட்டாவை மோசடியாக இணைத்து 1ம் எதிர் மனுதாரர்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.06.19 20:23:36 +0530

தீர்ப்பாணையின் பலனை பெறக்கூடாது என்று தடங்கல் மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டக்கூடிய பரிகாரம் கிடைக்கத்ததல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.06.19 20:23:45 +0530

மாவட்ட உரிமையில் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.